(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 27.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2023 மே 25, வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கடந்த “நல்லாட்சி அரசாங்கம்” ஆட்சியிலிருந்தபோது இலங்கை மத்திய வங்கியில் பிணைமுறி மோசடி இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் இலங்கை மத்திய வங்கியானது எந்த அமைச்சின் கீழ் இருந்தது என்பதையும்;

(ii) மேற்படி சந்தர்ப்பத்தில் குறித்த அமைச்சுக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சரின் பெயர் மற்றும் அமைச்சுச் செயலாளரின் பெயர் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி பிணைமுறி மோசடி தொடர்பில் இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

386/2023

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்குத் தனித்துவமான, அரிதான மற்றும் அழிவடையும் ஆபத்திலுள்ள தாவரங்கள் மற்றும் விலங்குகளின் மரபணு பாகங்களை சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு கொண்டு செல்வதில் ஈடுபடுகின்ற வெளிநாட்டவர்கள் உள்ளனர் என்பதையும்;

(ii) இவர்கள் கைது செய்யப்பட்டதையடுத்து விதிக்கப்படும் தண்டப் பணத்தை செலுத்திய பின்னர் இலகுவாக இலங்கையை விட்டு வெளியேற இவர்களுக்கு வாய்ப்பு கிட்டியுள்ளதா என்பதையும்;

(iii) இவர்கள் அடிக்கடி இலங்கைக்கு வருகை தந்து மேற்படி விடயத்தில் ஈடுபட்ட சந்தர்ப்பங்கள் பதிவாகியுள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி நடவடிக்கையில் ஒழுங்கமைந்த வகையில் ஈடுபட்டுள்ள நபர்களை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவ்வாறான செயற்பாடுகளைத் தடுப்பதற்கு போதுமான எண்ணிக்கையிலான வனவிலங்கு உத்தியோகத்தர்கள் உள்ளனரா என்பதையும்;

(ii) இன்றேல் மேற்படி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு வழிமுறையொன்று உள்ளதா என்பதையும்;

(iii) இலங்கையின் காடுகளில் சுற்றுலா பயணம் மேற்கொள்ளும் வெளிநாட்டவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அவ் வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

416/2023

கௌரவ கயந்த கருணாதிலக்க,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கைப் பொலிஸ் வசமுள்ள உத்தியோகபூர்வ மோப்ப நாய்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பொலிஸ் மோப்ப நாய்களின் வகைகள் யாவையென்பதையும்;

(iii) அவ்வொவ்வொரு வகைக்கும் ஏற்ப உத்தியோகபூர்வ மோப்ப நாய்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ பொலிஸ் மோப்ப நாய் பிரிவில் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் வரை பொலிஸ் உத்தியோகபூர்வ மோப்ப நாய்களின் உதவியுடன் கண்டுபிடிக்கப்பட்ட குற்றச் செயல்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டின் படி தனித்தனியே எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

431/2023

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பேராசிரியர், டாக்டர், கலாநிதி, வித்யாகீர்த்தி, வித்யாஜோதி, தேசபந்து, தேசகீர்த்தி, தேசமான்ய, விஷ்வகீர்த்தி மற்றும் தேசசக்தி போன்ற ஒவ்வொரு கௌரவ நாமங்கள்/கௌரவ பட்டங்கள்/ பதவிகளை அளிப்பதற்கு அதிகாரம் கொண்டுள்ள அரச நிறுவனங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கௌரவ நாமம்/கௌரவ பட்டம்/ பதவி வழங்கப்படும் போது பரிசீலிக்கப்படும் கல்வி மற்றும் இதர தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட கௌரவ நாமங்கள்/கௌரவ பட்டங்கள்/ பதவிகளுக்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற இதர கௌரவ நாமங்கள்/ கௌரவ பட்டங்கள்/பதவிகள் உள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அவற்றை வழங்கும் நிறுவனங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கௌரவ நாமங்கள்/கௌரவ பட்டங்கள்/பதவிகளை வழங்குகின்ற இலங்கையின் தனியார் நிறுவனங்கள்/அமைப்புகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனம்/அமைப்பினால் வழங்கப்படுகின்ற கௌரவ நாமங்கள்/கௌரவ பட்டங்கள்/பதவிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்கள்/அமைப்புகளை ஒழுங்குபடுத்துவதற்காக அரச செயன்முறையொன்று உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி செயன்முறை யாதென்பதையும்;

(v) கௌரவ நாமங்கள்/கௌரவ பட்டங்கள்/பதவிகளை வழங்கிய பின்னர் குறித்த ஆட்கள் தொடர்பாக பின் ஆய்வு மேற்கொள்ளும் செயன்முறையொன்று உள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அச் செயன்முறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

5.

690/2023

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவின் துறைநீலாவணை பிரதேசத்தில் காணப்படுகின்ற கிராமிய வைத்தியசாலை இன்றளவில் பிரதேச வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைக்காக இரண்டு மருத்துவர்களை நியமிக்க வேண்டியபோதிலும், இன்றளவில் ஒரு வைத்தியர் மட்டுமே நியமிக்கப் பட்டுள்ளார் என்பதையும்;

(iii) அந்த மருத்துவருக்கு வேறொரு வைத்தியசாலையிலும் பணிகளை கவனிக்க வேண்டியிருப்பதால், குறித்த பிரதேசத்தில் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(iv) ஆரம்ப காலத்தில் இந்த மருத்துவமனையில் நோயாளர் காவு வண்டியொன்று இருந்தபோதிலும் தற்போது நோயாளர் காவு வண்டியொன்று இல்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலைக்காக இதுவரை நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்காததன் காரணம் யாது என்பதையும்;

(ii) அந்த வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டி ஒன்றை வழங்காமைக்கான காரணம் யாது என்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலைக்காக நிரந்தர மருத்துவர் ஒருவரை நியமிக்கவும், நோயாளர் காவு வண்டி ஒன்றை வழங்கவும் எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

814/2023

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கைக்குத் தேவையான முட்டைகளின் எண்ணிக்கையானது அன்றாட மற்றும் வருடாந்த அடிப்படையில் எத்தனை என்பதையும்;

(ii) இன்றளவில் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற முட்டைகளின் எண்ணிக்கையானது அன்றாட, மாதாந்த மற்றும் வருடாந்த அடிப்படையில் எத்தனை என்பதையும்;

(iii) இன்றளவில் இலங்கையில் முட்டைக்கான தட்டுப்பாடு நிலவுமாயின், அத்தட்டுப்பாடானது அன்றாட மற்றும் மாதாந்த அடிப்படையில் எத்தனை என்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முட்டை உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சிறிய, நடுத்தர மற்றும் பாரிய அளவிலான உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அன்றாடம் 1000 இற்கும் மேற்பட்ட, 10,000 இற்கும் மேற்பட்ட மற்றும் 100,000 இற்கும் மேற்பட்ட முட்டைகள் எனும் ஒவ்வொரு தொகுதியின் கீழ் முட்டைகளை உற்பத்தி செய்கின்ற உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு தொகுதியின் கீழ் நாளொன்றில் உற்பத்தி செய்யப்படும் முட்டைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) முட்டை ஒன்றினை இறக்குமதி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் செலவு எவ்வளவு என்பதையும்;

(ii) அவ்வாறு இறக்குமதி செய்யப்படும் முட்டையொன்றினை நுகர்வோருக்கு வழங்கக் கூடிய விலை எவ்வளவு என்பதையும்;

(iii) முட்டை உள்ளிட்ட சில அத்தியாவசிய நுகர்வுப் பொருட்கள் ஏமாற்று வியாபாரிகளால் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

7.

3169/2023

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக இலங்கை ஊழியர்களைக் கோருகின்ற வெளிநாடுகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நாடும் இலங்கைக்கு வழங்குவதாக அறிவித்துள்ள வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக மொழிச் சான்றிதழ்கள் தேவைப்படும் நாடுகள் யாவை என்பதையும்;

(ii) அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சிச் சான்றிதழ்கள் தேவைப்படும் நாடுகள் யாவை என்பதையும்;

(iii) மொழிச் சான்றிதழ்கள் மற்றும் தொழில் பயிற்சிச் சான்றிதழ்கள் தேவைப்படாத நாடுகள் உள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தகைய நாடுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக இலங்கை ஊழியர்களை அனுப்புவதற்கு இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இலங்கை ஊழியர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்குத் தேவையான தகைமைகளை துரிதமாக பூர்த்தி செய்துகொள்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

8.

3226/2023

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டின் பின்னர் களுத்துறை மாவட்டத்தில் தேசிய பாடசாலைகளாக மாற்றியமைக்கப்பட்ட மாகாண பாடசாலைகளின் எண்ணிக்கை, மேற்படி ஒவ்வொரு பாடசாலையினதும் பெயர், உள்ளடங்கும் கல்வி வலயம், மாணவர்களின் எண்ணிக்கை, தேசிய பாடசாலையாக மாற்றியமைக்கப்பட்ட திகதி என்பன தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) மாகாண பாடசாலையாக காணப்பட்ட காலம் முதல் நீண்ட காலமாக மேற்குறிப்பிட்ட பாடசாலைகளில் சேவையாற்றி, இடமாற்றம் கோரியுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை, மேற்படி ஒவ்வொரு ஆசிரியரும் சேவையாற்றும் பாடசாலை, சேவைக் காலம் மற்றும் கல்வி வலயம் என்பன தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) மேற்படி இடமாற்றங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) இதன் காரணமாக ஏற்படுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) மேற்படி இடமாற்றங்களை வழங்கும் போது தொடர்புடைய பாடசாலை, தேசிய பாடசாலையாக மாற்றியமைக்கப்பட்ட திகதி முதல் மூன்று வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டுமென தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், மேலே (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு இதன் காரணமாக ஏற்படுகின்ற அநீதியைத் தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

3227/2023

கௌரவ நிரோஷன் பெரேரா,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க ஊழியர்களை வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக ஆற்றுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இன்றளவில் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக விண்ணப்பித்துள்ள அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கை, அவர்களுள் தற்போது வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக எதிர்காலத்தில் ஆற்றுப்படுத்த எதிர்பார்த்துள்ள அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக ஆற்றுப்படுத்தப்படுகின்ற அரசாங்க ஊழியர்களை, குறித்த தொழில்களின் நிமித்தம் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

3237/2023

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2021 ஆம் ஆண்டு தொடக்கம் அமய அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட சுமார் 500 ஊழியர்கள் இன்றளவில் வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்தில் பணியாற்றுகின்றனரா என்பதையும்;

(ii) அவர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறித்த ஊழியர்களுக்கான சேவை நிபந்தனைகள் யாவையென்பதையும்;

(ii) இலங்கையில் நடைமுறையிலுள்ள தொழில் சட்டங்கள் மேற்படி ஊழியர்கள் தொடர்பில் மீறப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) அரச ஊழியர்கள் தொடர்பில் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை நல்லாட்சி அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு அமைவாக இந்த ஊழியர்களுக்கான சம்பளம் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

பாராளுமன்றச் சபை முதல்வர், பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்,— சேவைநலன் பாராட்டுதல் தீர்மானம் — பாராளுமன்றச் செயலாளர் நாயகம்,— உதவிச் செயலாளர் நாயகமாகவும், பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகமாகவும், பாராளுமன்றச் செயலாளர் நாயகமாகவும் திரு. வருண பண்டார தம்மிக தசநாயக்க அவர்கள், பாராளுமன்றத்தில் 29 ஆண்டுகளுக்கு மேலாக ஆற்றிய அரும்பெரும் சேவையினை, குறிப்பாக பாராளுமன்ற நடைமுறைகள், வழமைகள் பற்றி அன்னாருக்கிருந்த பரந்த அறிவை இப்பாரராளுமன்றம் மனமார்ந்து பாராட்டுவதனையும், அன்னாரினால் வழங்கப்பட்ட ஒத்துழைப்புக்கும் ஆலோசனைக்கும் அவர்களின் மனமார்ந்த நன்றியறிதலையும், அன்னார் தமது பொறுப்புக்களை நெறிவழுவாது அர்ப்பணிப்புடன் திறம்பட நிறைவேற்றி, பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் ஆசிய பிராந்திய செயலாளராக 2010 முதல் 2012 வரையிலும் மற்றும் 2022 முதல் 2023 வரையிலும் சேவையாற்றி பொதுநலவமைப்பினுள்ளும் அதற்கு வெளியேயும் பாராளுமன்ற உறுப்பினர்களின் சங்கங்களுக்கு அவர் செலுத்திய பெறுமதிமிக்க பங்களிப்பை நினைவுகூர்வதனையும் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் பதவியிலிருந்து ஓய்வுபெறும் அன்னாருக்குத் தெரியப்படுத்துமாறு கௌரவ சபாநாயகர் வேண்டிக்கொள்ளப்படுவராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின் கீழ், புறப்படுகை வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 சனவரி 11 ஆம் திகதிய 2314/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 26 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 22 ஆம் பிரிவின் கீழ் சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர் அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 சனவரி 01 ஆம் திகதிய 2312/80 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 51 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 டிசம்பர் 31 ஆம் திகதிய 2312/69 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளைகள்,— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 51 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 பெப்ரவரி 10 ஆம் திகதிய 2318/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையில் இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்கும் வருமானத்தின் மீது வரிகொடாது தட்டிக்கழிப்பதைத் தடுப்பதற்குமான 2023 பெப்ரவரி 03 ஆம் திகதி செய்துகொள்ளப்பட்டதும், 2023.05.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 75(1) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

இலங்கை மத்திய வங்கி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— சிவில் விமான சேவைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைச் சட்டத்தின் 6(3)(அ) மற்றும் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 117(2)(ட) ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 26 ஆம் திகதிய 2303/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— சிவில் விமான சேவைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைச் சட்டத்தின் 117(2) மற்றும் 117(3) ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 நவம்பர் 02 ஆம் திகதிய 2304/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர்,— தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2இ, 5 மற்றும் 5அ ஆகிய பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அக் கட்டளைச் சட்டத்தின் 71 ஆம் பிரிவின் கீழ் வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய 2292/11ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.02.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*17.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்,— குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் 23 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 52 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டதும் 2023.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

கமத்தொழில் அமைச்சர்,— இலங்கை ஹதபிம அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2019),— 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விவசாய சட்டவாக்கல் கூட்டுத்தாபனச் சட்டத்தின் இலக்கம் 2 ஆம் பகுதியின் 23 ஆம் பிரிவின் கீழ் 2022.11.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை ஹதபிம அதிகாரசபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*21.

கமத்தொழில் அமைச்சர்,— இலங்கை ஹதபிம அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2020),— 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விவசாய சட்டவாக்கல் கூட்டுத்தாபனச் சட்டத்தின் இலக்கம் 2 ஆம் பகுதியின் 23 ஆம் பிரிவின் கீழ் 2022.11.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை ஹதபிம அதிகாரசபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*22.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) பீஎல்சியின் வருடாந்த அறிக்கை (2017),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2017.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) பீஎல்சியின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*23.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) பீஎல்சியின் வருடாந்த அறிக்கை (2018),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2018.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) பீஎல்சியின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*24.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) லிமிடட்டின் வருடாந்த அறிக்கை (2019),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) லிமிடட்டின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*25.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) லிமிடட்டின் வருடாந்த அறிக்கை (2020),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) லிமிடட்டின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*26.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) லிமிடட்டின் வருடாந்த அறிக்கை (2021),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஹோடெல் டிவலொப்பர்ஸ் (லங்கா) லிமிடட்டின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

27.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.
சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.
சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.
அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.
ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.
சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.
கிழக்கு மீளெழுச்சி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.
இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.
சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.
தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சிபீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.
சஹன சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.
சமாதி தியான மன்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.
றுஹுணு உதானய அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.
“மாத்தறைப் பருவம்” அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.
இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.
விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.
முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.
தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.

இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

51.

திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

52.

திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

53.

தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

54.

பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

55.

மாகாணசபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

56.

பலப்பிட்டிய ஸ்ரீ ராஹுலாராம புராண விஹாரஸ்த்த சாமனேர ஆகல்ப சங்வர்தன பிக்ஷு கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

1.

3266/2023

கௌரவ எம்.எஸ். தௌபீக்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாதாந்த அவைக் கூட்டங்கள் நடாத்தப்படுகின்ற மண்டபங்களில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கான சமகால உரைபெயர்ப்பு வசதிகள் இல்லாத தென் மாகாண உள்ளூராட்சி மன்றங்கள் யாவை என்பதையும்;

(ii) தமிழ் மொழியைப் பயன்படுத்தும் மக்கள் கணிசமான எண்ணிக்கையானோர் வாழும் தென் மாகாணத்தின் உள்ளூராட்சி மன்ற அதிகாரப் பிரதேசங்கள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி உள்ளூராட்சி மன்ற அதிகாரப் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iv) நிருவாக மொழியாக சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளும் பயன்படுத்தப்பட வேண்டுமென பிரகடனம் செய்யப்பட்டுள்ள அதிகாரப் பிரதேசங்கள் உள்ளடங்கும் தென் மாகாணத்தில், உள்ளூராட்சி மன்றங்களின் மாதாந்த அவைக் கூட்டங்கள் நடாத்தப்படுகின்ற மண்டபங்களுக்கு சமகால உரைபெயர்ப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

3267/2023

கௌரவ எம்.எஸ். தௌபீக்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தினதும் 1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வீதிகளுக்குப் பெயரிடுதல் மற்றும் நினைவுச் சின்னங்களை அமைத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் சட்டத்தினதும் ஏற்பாடுகளை மீறி திக்வெல்ல பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள “அசாத்புர” கிராமத்தின் பெயர் மற்றும் திக்வெல்ல - பெலியத்த பிரதான வீதியின் இருமருங்கிலும் “யோனக்கபுர” என குறிப்பிடப்பட்டிருந்த பெயர்ப்பலகைகள் அகற்றப்பட்டு வேறு பெயர்கள் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி விடயம் தொடர்பில் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் செயலாளருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இவ்விடயம் குறித்து தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் திக்வெல்ல பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் செயலாளருக்கு அனுப்பிய 4/2/4 ஆம் இலக்க மற்றும் 2022.02.08 ஆம் திகதிய கடிதம் சம்பந்தமாக இதுவரை எதுவிதமான பதிலும் அளிக்கப்படாமை தொடர்பில் அவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அத் திகதிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

3268/2023

கௌரவ எம். எஸ். தௌபீக்,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வக்பு பிரிவானது முஸ்லிம் பள்ளிவாசல்கள், தக்கியாக்கள், ஸாவியாக்கள் மற்றும் தர்காக்கள் உட்பட அறக்கொடை நிறுவனங்களுக்குச் சொந்தமான அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் தொடர்பான தரவுத் தளமொன்றைப் பேணிச் செல்லாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) அவ்வாறு தரவுத் தளமொன்றை பேணிச் செல்லாமை காரணமாக மேற்படி நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்கள், தனிப்பட்ட சொத்துக்களாகப் பயன்படுத்துதல் மற்றும் வக்பு சபைக்குத் தெரியாமல் மேற்படி சொத்துக்களை அதிக விலைக்கு விற்பனை செய்தல் போன்ற ஊழல்களும் முறைகேடுகளும் இடம்பெறுகின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி ஊழல்களையும் முறைகேடுகளையும் தடுப்பதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கையாக மேற்குறித்த சொத்துக்கள் தொடர்பில் முறையான தரவுத் தளமொன்றை அமைப்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?